**கல்குடா கல்வி வலய,இடர் விடுமுறைக்கால சுயகற்றலுக்கான க.பொ.த. உயர்தரம் செயலட்டை:05**

# இந்து நாகரிகம் – இந்துசமயம்

**பல்தேர்வு வினா விடை**


'சைவப் புலவர்' 'இந்து தர்மாசிரியர்'

**திருமதி. ஸோபா ஜெயரஞ்சித்**

B.A. (Hons), Dip. in.Edu.(NIE), Dip.in.Office Administration (First class), Dip.in.Tamil(Colombo Tamil sangam), Dip.in.Tamil(UOP),Dip.in.School Management(Merit Pass),

**மட்/ககு - பேத்தாழை விபுலானந்தாக் கல்லூரி, வாழைச்சேனை.**


**அலகு : ஆகமம்**

<u>அறிவுறுத்தல்கள்</u>:

* எல்லா வினாக்களுக்கும் விடை அளிக்குக.
* 1 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் (1),(2),(3),(4),(5) என எண்ணிடப்பட்டுள்ள விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவு செய்க.

1. சைவாகமங்களுள் சிவபேதம் மூன்றும் அடங்கும் தொகுதி.
   1. காரணம், காமிகம், சிந்தியம்  2. தீப்தம், சூக்குமம், விஜயம்
   3. சகஸ்ரம், அம்சுமான், நிச்சுவாசம்  4. சுப்பிரபேதம், வாதுளம், ஆக்னேயம்
   5. பாரமேசுரம், இரணம், வாதுளம்
2. அட்டப்பிரகரணங்களுள் மூன்றும் அடங்கும் தொகுதி.
   1. தத்துவப்பிரகாசிகை, தத்துவ சங்கிரகம், உண்மைநெறி விளக்கம்
   2. போககாரிகை, நாதகாரிகை, நெஞ்சுவிடு தூது
   3. சிவப்பிரகாசம், திருவருட்பயன், சங்கற்ப நிராகரணம்
   4. நாதகாரிகை, பரமோட்சகாரிகை, இரத்தினத்திரயம்
   5. போககாரிகை, மோட்சகாரிகை, யாப்பருங்கலக்காரிகை
3. சைவாகமங்களுக்கு உரை எழுதியோர் மூவர் அடங்கும் தொகுதி.
   1. அகோரசிவாசாரியார், உமாபதி சிவாசாரியார், மறைஞானசம்பந்தர்
   2. சத்திஜோதிசிவாசாரியார், பட்டநாராயண கண்டர், பட்டரா கண்டர்
   3. ஞானப்பிரகாசர், ஆறுமுகநாவலர், அப்பைய தீட்சிதர்
   4. சூரியப்பட்டாரர், சிவாக்கிரகயோகி, சத்தியஜோதி சிவாசாரியார்
   5. சிவானந்த தீட்சிதர், சுவாமிநாத தீட்சிதர், அப்பைய தீட்சிதர்
4. சிவமூலாகமங்களின் எண்ணிக்கை.
   1. 18  2. 28  3. 14  4. 10  5. 108
5. ஆலயத்தில் கிரியை ஆற்றுவதற்கு சிவாச்சாரியாருக்கு உதவும் மூன்று அம்சங்கள்.
   1.மந்திரம், கிரியை, பாவனை  2.சாத்வீகம், ராஜதம், தாமதம்  3.அறம், பொருள், இன்பம்
   4.யோகக்காட்சி, காண்டல், உண்மை  5. மந்திரம், தீபம், மணி
6. பின்வருவனவற்றுள் சைவாகமங்கள் அடங்கும் தொகுதி.
   1.பரமேசுரம், இரணம், தேவாரம்  2.நிச்சுவாசம், விமலம், திருவாசகம்
   3.ரௌரவம், மகுடம், விமலம்  4. காரணம், சித்தம், முண்டகம்
   5. சாரதாதிலகம், வாதுளம், சிந்தியம்
7. சிவாகமங்களில் கிரியாபாதம் குறிப்பிடுவது.
   1. பவித்திரவிதி, ஆலய அமைப்பு, பிராயச்சித்த விதி
   2. அட்டாங்க யோகம், அட்டமாசித்திகள், ஆறுவகை ஆதாரங்கள்
   3. மந்திரம், உற்சவம், நித்திநைமித்திய விதிகள்
   4. முப்பொருள் உண்மை, புவனங்களில் தோற்றம், சிவலிங்க இலக்கணம்
   5. கோபுரம், பரிபாலகர் அமைப்பு, காமியக் கிரியைகள்
8. சாக்த தந்திரங்கள் என அழைக்கப்படுபவை.

1. சாக்த புராணம் 2. சாக்த உபநிடதம் 3. கனகதாரா ஸ்தோத்திரம் 4. நவராத்திரி பாமாலை 5. சாக்த ஆகமங்கள்

9. சிவாகமங்களில் இரு பேதங்கள் அடங்கும் தொகுதி.
1. சிவபேதம், பேதாபேதம் 2. சிவபேதம், உருத்திரபேதம் 3.உருத்திரபேதம், சிவநேஸ்வரபேதம் 4. சிவஈஸ்வரபேதம், பேதாபேதம் 5. சுவகதபேதம், சிவபேதம்

10. வைணவ ஆகமத்தை அழைக்கும் மரபு.
1. பாகவத சாத்திரம் 2. தந்திரம் 3. மந்திரம் 4. சித்தாந்தம் 5. பஞ்சராத்திரம்

11. ஆகமங்களுக்கு வழிகாட்டியாக எழுதப்பட்டவை.
1. பத்ததிகள் 2. சாஸ்திர நூல்கள் 3. தேவாரம் 4. திருவாசகம் 5. மகாத்தியங்கள்

12. சிவாகமங்களுள் ஞானாபாதப் பொருளாகிய சைவசித்தாந்தத்தை 'சித்தாந்தேன நிவேதிகம்' என்று குறிப்பிடும் ஆகமம்.
1.இரணம் 2.மகுடம் 3.காமிகம் 4.சுப்பிரபேதம் 5.ரௌராகமம்

13. சிவாகமம் கூறும் திருக்கோயில் அமைப்பில் மையமாக விளங்குவது.
1. வசந்த மண்டபம் 2. நந்தி, பலிபீடம் 3. பரிவாரக்கோயில் 4. கருவறை 5. கோபுரம்

14. சைவ சமயத்தின் பொதுநூல் வேதம் எனவும் சிறப்பு நூல் ஆகமம் எனவும் போற்றியவர்.
1. திருவள்ளுவர் 2. திருமூலர் 3. ஸ்ரீ இராமகிருஸ்ணர் 4. சங்கரர் 5. ஸ்ரீ துளசிதாசர்

15. ஆகமம் கூறும் ஆலயக்கிரியைகளில் புனராவர்த்தனப் பிரதிஷ்டை எனப்படுவது.
1. ஆலயத்தையும் விக்கிரகங்களையும் மீண்டும் திருப்பணிகள் மூலம் புனரமைத்துப் பிரதிஷ்டை செய்தல்.
2. பலகாலம் முன் அமைக்கப்பட்ட ஆலயத்தில் எதிர்பாராத தீ பரவுதல், மண்மானி போன்ற தடைகளினால் நித்திய பூசை பாதிக்கப்படின் அதனை நிவர்த்தி செய்ய நிகழ்த்துதல்
3. ஆலயம் இல்லாத ஓரிடத்தில் ஆகம விதிகளுக்கேற்ப புதிய ஆலயமொன்றினை அமைத்தல்.
4. எதிர்பாராத தீய விளைவுகளினால் நித்திய பூசை பாதிக்கப்படின் உடன் நிகழ்த்தப்படுவது.
5. கணபதியை பிரதிஷ்டை செய்தல்

16. உருத்திரபேத ஆகமங்கள் அடங்கும் தொகுதி.
1. விஜயம், நிச்சுவாசம், சுவாயம்புவம், அஜிதம்
2. ஆக்னேயம், வீரம், ரௌரவம், மகுடம், விமலம்
3. சந்திரஞானம், முகவிம்பம், புரோற்கீதம், லலிதம், தீப்தம்
4. சித்தம், சந்தானம், சர்வோக்தம், பாரமேசுரம், தீப்தம்
5. சர்வோக்தம், பாரமேசுரம், தீப்தம், காரணம், காமிகம்

17. சிவாகமங்களைக் கேட்ட ரிஷிகள் அடங்கும் தொகுதி.
1. கௌதமர், காசிபர், கணாதர், அகத்தியர்
2. காசிபர், கௌதமர், பரத்துவாசர், கௌசிகர்
3. பரத்துவாசர், அகத்தியர், வசிட்டர், வாமதேவர்
4. அகத்தியர், விசுவாமித்திரர், கண்கவர், வாமதேவர்
5. வசிட்டர், விசுவாமித்திரர், வியாசர், நாரதர்

18. சொந்த நன்மை கருதி செய்யும் பூசை.
1. பரார்த்த பூசை 2. உச்சிகாலப் பூசை 3. ஆன்மார்த்த பூசை 4. சாயரட்சைப் பூசை 5. ஆன்மநிவேதனம்

19. இரௌரவ ஆகமத்தின் மொழிபெயர்ப்பாகக் கருதப்படுவது.
1. இரத்தினத்திரயம் 2 . சிவஞானபோதம்3. சிவப்பிரகாசம் 4. மகுடம் 5. கொடிக்கவி

20. சிவாகமங்களின் வழிநூல்கள் அடங்கும் தொகுதி.
1. அஷ்டப்பிரகரணம், திருமந்திரம், பத்ததிகள்2. புராணங்கள், முதலாம் திருவந்தாதி, திருவருட்பயன்
3. சிற்ப சாஸ்திரம், வாஸ்து சாஸ்திரம், திருமுறை4. மீமாம்சை, தர்க்கம், சிவஞானபோதம்
5. பத்ததிகள், திருமுறை,மெய்கண்டசாத்திரம்

21. சிவாகமங்கள் சித்தாந்தமாகும் எனக் கூறும் நூல்.
1. சிவஞானபோதம் 2. சிவஞானசித்தியார் 3. திருவுந்தியார் 4. தேவாரம் 5. திருமந்திரம்

22. திருமூலர் குறிப்பிடும் ஆகமங்கள் எவை?
1. காரணம், காமிகம், வீரம், தீப்தம் 2. சிந்தியம், வாதுளம், வியாமளம், வீரம்
3. சுப்பிரபேதம், மகுடம், அஜிதம் 4. காரணம், அம்சுமான், முகவிம்பம், லளிதம்
5. அம்சுமான், லளிதம், சாரதாதிலகம்

23. வைணவ சமயத்தின் ஆகமங்கள்.
1. சிவாகமங்கள் 2. தந்திரங்கள் 3. பாஞ்சராத்திரம், வைகாசனம்4. குமாரதந்திரம் 5. திரிபுரரகசியம்

24. ஆகமங்களைச் சுட்டும் சிறப்புப் பெயர்கள்,
1. சிரௌதம், சுபதந்திரம் 2. பிரபரசுருதி, சாத்திரம் 3. வேதசிரசு, பரசுருதி 4. சுபதந்திரம், மறை 5. சிரௌதம், ஞானம்

25. மகோற்சவக் கிரியையில் இரதோற்சவம் குறிப்பது.
1. படைத்தல் 2. காத்தல் 3. அழித்தல் 4. மறைத்தல் 5. அருளல்

26. ஆகம முறையோடிணைந்த நாட்டார் வழிபாடு.
1. சூரன்போர் 2. காத்தான் கழுவேறல் 3. கண்ணகி வழக்குரை 4. காமன் கூத்து 5. நோன்பு

27. ஆகமப் பொருளை முதலில் தமிழில் தந்தவர்.
1. திருநீலகண்டர் 2. திருவெண்காடர் 3. திருஞானசம்பந்தர் 4. திருமூலர் 5. சுந்தரர்

28. ஆகமம் என்ற சொல்லில் 'ஆ' குறிப்பது.
1. பசு 2. மோட்சம் 3. சிவஞானம் 4. மலநாசம் 5. உலகம்

29. ஆலயக்கிரியையில் கர்ஷனம் குறித்து நிற்பது.
1. திருவுருவங்களை பிரதிஸ்டை செய்வது 2. வருடமொருமுறை நடைபெறும் திருவிழா 3. ஆலயம் அமைப்பதற்கு இடத்தை தெரிவு செய்தல் 4. குற்றத்தை நிவர்த்தி செய்தல் 5. முளைப்பாரி இடுதல்

30. சைவக்கிரியையைச் சிறப்பாக விளக்க எழுந்த நூல்.
1. வேதம் 2. புராணம் 3. ஆகமம் 4. இதிகாசம் 5. தருமசாத்திரம்

31. சைவ நாற்பாதங்கள் அடங்கும் தொகுதி.
1. மந்திரம், பிராமணம், ஆரணியம், உபநிடதம் 2. மந்திரம், பிராமணம், யோகம், ஞானம் 3. சரியை, கிரியை, யோகம், ஞானம் 4. இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் 5. தாசியம், சற்புத்திரம், சாமீபம், சாரூபம்

32. சைவ ஆகமங்களில் 'வித்தியாபாதம்' என அழைக்கப்படுவது.
1. சரியாபாதம் 2. யோகபாதம் 3. ஞானாபாதம் 4. கிரியாபாதம் 5. இராஜயோகம்

33. ஆலயக்கிரியைகளில் பஞ்சசுத்திகளில் அடங்குவது.
1. ஆன்மசுத்தி, திரவியசுத்தி, பூதசுத்தி 2. தத்துவசுத்தி, பூதசுத்தி, இலிங்கசுத்தி 3. பூதசுத்தி, தலசுத்தி, திரவியசுத்தி 4. சிவசுத்தி, ஆன்மசுத்தி, மாயாசுத்தி 5. ஆன்மசுத்தி, தலசுத்தி, மாயாசுத்தி

34. ஆலயக்கிரியைகளை ஆக்குவதில் கைதேர்ந்தவன்.
1. சிற்பி 2. ஸ்தபதி 3. சிவாசாரியன் 4. ஓதுவார் 5. பூசாரி

35. வித்தியா தத்துவங்கள் மூன்று அடங்கும் தொகுதி.
1. காலம், நியதி, கலை 2. வித்தை, அராகம், மனம் 3. புருடன், மாயை, புத்தி 4. மனம், புத்தி, அகங்காரம் 5. காலம், நியதி, சுவை

36. கும்பாபிஷேகத்தின் நான்கு வகைகள் அடங்கும் தொகுதி.
1. வேதம், ஆகமம், திருமுறை, மெய்கண்ட சாஸ்திரம்
2. அனாவர்த்தனம், ஆவர்த்தனம், புனராவர்த்தனம், அந்தரிதம்
3. அந்தரிதம், குடமுழுக்கு, ஆருத்திரா, அனாவர்த்தனம்
4. ஆருத்திரா, அபிடேகம், அலங்காரம், தேர்த்திருவிழா
5. வேதம், ஆகமம், தோத்திரப்பாடல், திருமுறை

37. பஞ்சகௌவியம் என்பது.
1. பால், இளநீர், தயிர், நெய், பழம் 2. பால், சர்க்கரை, அறுகம்புல், கோசலம், கோமயம் 3. பால், தயிர், நெய், கோசலம், கோமயம் 4. தயிர், நெய், இளநீர், கரும்பு, பன்னீர் 5. தயிர், நெய், பன்னீர், சந்தனம், குங்குமம்

38. விமான கோஷ்டங்களில் இடம்பெறும் தேவர்கள் அடங்கிய தொகுதி.
1. தட்சிணாமூர்த்தி, மகாவிஷ்ணு, பிரமன், மகாலட்சுமி, காமாந்தகர்
2. இலிங்கோற்பவர், தட்சிணாமூர்த்தி, விநாயகர், பிரமன், துர்க்கை
3. தட்சிணாமூர்த்தி, இலிங்கோற்பவர், பிரமன், விஸ்ணு, மகாலட்சுமி
4. திரிபுராந்தகர், இலிங்கோற்பவர், கலாநிமூர்த்தி, விநாயகர், குமாரக்கடவுள்
5. உமாமகேஸ்வரர், காமாந்தகர், அர்த்தநாரீஸ்வரர், சோமஸ்கந்தர், நடராஜர்

39. ஆன்ம தத்துவங்கள் தோன்றுமிடம்.
1. நியதி 2. பிண்டம் 3. வித்தை 4. பிரகிருதி 5. பதி

40. மகோற்சவக் கிரியையின் போது அங்கு நூற்பணத்துக்குத் தேவையான மண்ணினை மந்திரசகிதமாகப் பெறுதல்.
1.அனுக்ஞை 2.பிருத்சங்கிரணம் 3.சகளீரணம் 4.பேரீபாதனம் 5. ரக்ஷாபந்தன்

41. ஆகமங்களை இறைநூல் என்பது.
1. உண்மை வழக்கு 2. உபசார வழக்கு 3. பாமர வழக்கு 4. பண்டித வழக்கு
5. முன்னோர் வாக்கு

42. வேதம் பொது ஆகமம் சிறப்பு என்பதால் குறிப்பிடப்படுவது.
1. இந்துமதத்தின் முதல் நூல் வேதம் என்பது
2. அனைத்து இந்துமத கோட்பாட்டிற்கும் வேதமே ஆதாரம் என்பது
3. சைவநெறிக்கு வேதாகமம் முதன் நூல் என்பது
4. பிற்கால இலக்கியங்களுக்கு வேதங்களே அடிப்படை என்பது
5. ஆகமம் முதன் நூல் என்பது

43. "மன்னுமாமலை மகேந்திரமதனில் சொன்ன ஆகமம்....." எனப் பாடியவர்,
1. திருமூலர் 2. சம்பந்தர் 3. நாவுக்கரசர் 4. சுந்தரர் 5. மாணிக்கவாசகர்

44. மந்திரம், உற்சவம், நித்திய, நைமித்திய, காமிய கிரியைகள், சிவசின்னங்களை அணியும் முறை பற்றிக் கூறும் ஆகமப் பகுதி,
1. கிரியாபாதம் 2. சரியாபாதம் 3. கிரியாபத்ததி 4. கிரியாபடலம் 5. யோகபாதம்

45. 'ஆகமாந்தம்' என அழைக்கப்படுவது,
1. உபநிடதம் 2. ஞானபாதம் 3. பிராயச்சித்தம் 4. யோகபாதம் 5. பிராமணம்

46. ஆகமம் கூறும் சிவனது மூர்த்தி பேதங்களுட் சில அடங்கும் தொகுதி,
1. சிவலிங்கம், சம்பு, சங்கரன், கங்காதரர் 2. கங்காதரர், தட்சணாமூர்த்தி, சிவம், சம்பு
3. சிவலிங்கம், கங்காதரர், சங்கரன், அரன் 4.இலிங்கோற்பவர், கங்காதரர், வேணன், ஹரி
5. சிவலிங்கம், அர்த்தநாரீஸ்வரர், இலிங்கோற்பவர், கங்காதரர்

47. சிவாகமங்கள் கூறும் கோயிற் கிரியைகளின் நான்கு பிரிவுகளும்,
1. நித்தியம், நைமித்தியம், கர்ஷணம், பிரதிட்டை
2. கரஷ்ணம், பிரதிட்டை, உறச்வம், பிராயச்சித்தம்
3. அபிசேகம், அலங்காரம், நைவேத்தியம், அர்ச்சனை
4. கர்ஷணம், அந்தரிதம், பிரதிட்டை, பிராயச்சித்தம்
5. அனாவர்த்தம், ஆவர்த்தம், அந்தரிதம், புனருத்தாரணம்

48. சித்தாந்த சிந்தனைகளைப் பெரிதும் கொண்ட சிவாகமங்கள்,
1. கிரணம், ரௌரவம், பௌஷ்கரம் 2. கிரணம், ரௌரவம், காரணம்
3. கிரணம், ரௌரவம், காமிகம் 4. காரணம், காமிகம், வாதுளம்
5. காரணம், கிரணம், சிந்தியம்

49. கிரணாகமத்தின் பகுதிகளுள் அடங்காதது,
1.பதிப் படலம், 2.பசுப் படலம், 3.மாயாப் படலம், 4.மந்திராவதாரப் படலம்
5.சத்திநிபாதப் படலம்

50. அட்டப்பிரகரண ஆசிரியருள் ஒருவர்,
1. துர்வாசசிவர் 2. பைங்களசிவர் 3. போசதேவர் 4. உக்கிரசோதி 5. அகோரசிவர்

**(50×2=100 புள்ளிகள்)**